ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA

# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2015 யு‘லை

## (AA23) வியாபாரச் செயற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

இந்த வினாப்பத்திரம் குறித்த கனத்திற்கு இணங்க பாடத்திட்டத்தின் சகல அலகுகளையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக, பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. ஆனால், சில பரீட்சார்த்திகள் வெற்றிகரமாகப் பதிலளிப்பதற்குத் தவறியிருந்தனர். **பரீட்சகர்களின் அறிக்கையின்** பிரதான நோக்கம் வெற்றிகரமாகப் புள்ளிகளைப் பெற்றிராத பரீட்சார்த்திகளுக்கு உதவக்கூடிய பாடப்பரப்புக்களை நோக்கி அவர்களது கவனத்தை ஈர்ப்பதாகும். தனித்தனியாக ஒவ்வொரு வினாவையும் கருத்திலெடுத்த விடைத்தாள் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட முக்கியமான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### பகுதி A

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இந்த வினா 20 புள்ளிகளுக்காக 12 நோக்குச் சோதனை வினாக்களைக் கொண்டுள்ளது.

இந்த வினா பாடத்திட்டத்தின் பரந்தளவான பகுதியினையும் மாணவர்களின் செயல்முறைத் அறிவையும் உள்ளடக்கியிருந்தது. அநேகமாக, எல்லாப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவிற்கு விடையளித்திருந்தனர். ஆனால் அவர்களுள் பெரும்பாலானவர்களால் அதிகளவான புள்ளிகளைப் பெற முடியவில்லை. பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான தயார்ப்படுத்தலில் கொண்டிருந்த குறைபாடும் வினாவுக்கான சரியான தேவைப்பாடுகளை விளங்கிக் கொள்ளாமையுமே இதற்கான பிரதான காரணங்களாகும். **1.6, 1.10, 1.12** ஆகிய வினாக்களுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை. பரீட்சகர்கள் இது தொடர்பாக பின்வருவனவற்றை அவதானித்துள்ளனர்.

**1.6** இங்கு போட்டரின் பெறுமதிச் சங்கிலியின் பிரதான நடவடிக்கைகள் மற்றும் உதவி நடவடிக்கைகள் பற்றிய சரியான புரிதலை அளவீடு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சில பரீட்சார்த்திகள் போட்டரின் பெறுமதிச் சங்கிலிக்கு இணங்க தரப்பட்ட தெரிவு களிலிருந்து பிரதான நடவடிக்கைகளைச் சரியாகத் தெரிவு செய்வதற்குத் தவறியிருந்தனர். பெரும்பாலானவர்கள் 3ஆவது விடையான ‘‘பெறுகை’’ இனைத் தெரிவு செய்திருந்தனர். அதற்கிணங்க, பரீட்சார்த்திகள் வியாபாரச் செயற்பாட்டு முகாமைத்துவத்தில் விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு மாதிரிகள் தொடர்பாக துல்லியமான அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**1.10** பலர், வினாவில் தரப்பட்ட தெரிவுகளிலிருந்து ஆயுள் காப்புறுதிக்குப் பிரயோகிக்கத்தக்க எண்ணக்கருவுக்கான சரியாக விடையினைத் தெரிவு செய்திருக்கவில்லை. எனவே, பரீட்சார்த்திகள் காப்புறுதி எண்ணக்கருக்கள் தொடர்பாக தெளிவானதும் உறுதியானதுமான அறிவினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் பல்வேறு காப்புறுதிக் கொள்கைகளின் இயல்புகளுக்கு இடையிலான வேறுபாட்டைத் அறிந்து கொள்ளும் திறனையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**1.12** மனித வள முகாமைத்துவச் செயற்பாடுகளின் நோக்கெல்லையினை வகைப்படுத்துதல் தொடர்பாக மிகவும் பிரத்தியேகமான விடையை எதிர்பார்த்த இந்த வினாவுக்கு அதிகளவிலான பரீட்சார்த்திகள் விடையளிக்க தவறியிருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் அம்சங்கள் மீதான தமது அறிவை விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

## பகுதி B

இப்பகுதி 25 புள்ளிகளுக்காக 5 கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு வினாவிற்கும் 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**வினா இல 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா முகாமைத்துவத்தின் பிரதான எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் பிரதான முகாமைத்துவ எண்ணக்கருக்களுக்கு பதிலாக முகாமைத்துவத்தின் செயற்பாடுகளை எழுதியுள்ளனர். இதன் விளைவாக இந்த இலகுவான வினாவிற்கு பல பரீட்சார்த்திகள் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகள், முகாமைத்துவத்தின் அடிப்படையான பாடப்பரப்புகள் தொடர்பாக தமது அறிவை மேலும் விருத்தி செய்ய வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

**வினா இல.03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இங்கு ''மீள்-காப்புறுதி'' தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டது. அதிகமான பரீட்சார்த்திகள் மீள்-காப்புறுதியின் எண்ணக்கருக்கள் பற்றி விளக்கமின்றிக் காணப்பட்டதுடன் மிகச் சிலரே இந்த வினாவுக்காகச் சரியான விடையினை அளித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் ''மீள்-காப்புறுதி'' இற்காகத் தகுந்ததொரு உதாரணத்தினை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். இது, காப்புறுதிக் கொள்கைகளின் வகைகளை விவரிப்பதில் பரீட்சார்த்திகளால் காட்டப்பட்ட போதுமானதற்ற (குறைவான) அறிவினைச் காட்டுகிறது. பரீட்சார்த்திகள், வியாபாரச் செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தினைக் கற்கும்போது வியாபாரத்தின் ஆதரவுச் (உதவிச்) சேவைகள் தொடர்பாக ஆழமான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல.04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

வினாவானது மிக இலகுவாக மொத்தத் தர முகாமைத்துவத்தின் (TQM) ஏதாவது 5 கோட்பாடுகளைப் பட்டியலிடுமாறு மட்டுமே கோரியிருந்த போதிலும் ஒருசில விரல்விட்டு எண்ணக்கூடிய பரீட்சார்த்திகளே முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது, பரீட்சார்த்திகள் தர முகாமைத்துவ அணுகுமுறைகள் தொடர்பாக தமது அறிவினை விருத்தி செய்யகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

**வினா இல.05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா மனித வள முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, செயலாற்றுகை மதிப்பீடு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்த்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவினை நன்கு விளங்கிக்கொள்ளாது ZED வியாபாரக் கல்லூரியின் கல்விசார் ஊழியர்களுக்கான செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமைக்குப் பதிலாக ZED வியாபாரக் கல்லூரியின் மாணவர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையின் அம்சங்களை எழுதியிருந்தனர். பல மாணவர்கள் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையின் அம்சங்களை விவரிக்கையில் தேவையற்ற விடயங்களையும் தந்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவினை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளாமையை இது வெளிக்காட்டுகிறது.

**வினா இல.06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா சற்று இலகுவானதாக இருந்ததுடன், அது ஒரு வியாபார நிறுவனத்திற்கான இணையத்தின் அனுகூலங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு மற்றும் விளங்கிக் கொள்ளும் தன்மை ஆகியவற்றைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்தது. பெரும்பாலான விடைகள் திருப்திகரமானதாக அமைந்திருந்ததுடன் இணையம் பற்றிய நடைமுறை அறிவு காரணமாக இவ்வினாவுக்கு விடையளித்தவர்கள் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகள் வியாபார முகாமைத்துவத்தின் தொழினுட்பம் சார்ந்த செயலிகளின் அடிப்படையில் நடைமுறை அம்சங்களைச் சோதிப்பதாகவிருந்த இந்த வினாவுக்குச் சுதந்திரமாக (தாராளமாக) விடையளித்திருந்தனர்.

## பகுதி C

**வினா இல.07** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

(a) இது பரீட்சார்த்திகளின் இருப்பு (தொக்கு) முகாமைத்துவம் தொடர்பான அறிவினைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்தது. பகுதி (a) இல், பாரம்பரிய இருப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் உரிய நேர (Just in Time - JIT) இருப்பு முகாமைத்துவ முறைமை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை அடையாளங்காணத் தேவைப்படுத்தப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பாரம்பரிய இருப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் உரிய நேர இருப்பு முகாமைத்துவ முறைமை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினைச் சரியாக வழங்கி உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

(b) இங்கு ''சிக்கனக் கட்டளை மட்ட மாதிரி'' பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகக் குறைந்தளவிலேயே இருந்தது. இங்கு கட்டளை அளவு, வருடாந்தம் தேவைப்படும் கட்டளைகளின் எண்ணிக்கை, வருடாந்த காவும் கிரயம் மற்றும் வருடாந்த கட்டளைக் கிரயம் ஆகியவற்றைப் பெறுவதற்கு ''சிக்கனக் கட்டளை மட்டச்'' சூத்திரத்தினைப் பிரயோகிப்பது எதிர்பார்க்கப்பட்டது. EOQ சூத்திரத்தின் வர்க்கமூலத்தைத் துல்லியமான முறையில் பிரயோகிப்பதற்கு பல பரீட்சார்த்திகள் தவறியிருந்தமை ஒரு பொதுவான தவறாகக் காணப்பட்டது. உதாரணமாக, பகுதி எண்ணுக்கு மட்டும் அல்லது தொகுதி எண்ணுக்கு மட்டும் வர்க்கமூலத்தை இட்டிருந்தனர். மேலும், சம்பந்தப்பட்ட சூத்திரத்தினைப் பிரயோகிப்பதன் மூலம் வருடாந்த காவும் கிரயம் மற்றும் வருடாந்த கட்டளைக் கிரயம் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பது என்பது பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தினைப் பரீட்சார்த்திகள் பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், சூத்திரத்தை தீர்த்து விடை காண்பதில் பிரச்சினைகளும் தவறுகளும் காணப்பட்டமையும் அவதானிக்கப் பட்டது. சிலவேளைகளில் பரீட்சார்த்திகள் விடைகளைப் பெறுகையில் கவனக்குறைவு காரணமாக எளிய எண்கணித பிழைகளையும் விட்டிருந்தனர்.

**வினா இல.08** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

(a) இது மனித வள முகாமைத்துவத்தில் உள்ள ஒரு முக்கிய ஒழுக்காறான ஆற்றல் முகாமைத்துவம் (Talent Management) மீதான ஒரு சிறு விவரண (scenario) அடிப்படையிலான வினாவாக இருந்தது. பகுதி (a) இல், ''ஆற்றல் முகாமைத்துவத்தின்'' பிரதான அம்சங்களை கூறுமாறு கேட்கப்பட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டும் செயலாற்றுகை மதிப்பீடு, பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் பிரகாரம் ஆற்றல் முகாமைத்துவத்தின் பிரதான அம்சங்களுக்கான சரியான விடையினைத் தந்திருந்தனர்.

(b) பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆற்றல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை மெய்ப்பித்துக் காட்டுவதற்கான ஒரு அறிக்கையைத் தயாரிப்பதில் வெற்றி கண்டு, அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது, பரீட்சார்த்திகள் இந்த எண்ணக்கரு தொடர்பில் போதுமானளவு அறிவினைக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் ஆற்றல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் காட்டுவதற்குப் பதிலாக ''ஆற்றல் முகாமைத்துவம் என்றால் என்ன'' என்பதை விவரித்திருந்தனர். எனவே, இதன் விளைவாக அத்தகைய பரீட்சார்த்திகள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**வினா இல.09** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

(a) இந்த வினா இலத்திரனியல் வர்த்தகத்தை (E-commerce) அடிப்படையாகக் கொண்டிருந்தது. இலத்திரனியல் வர்த்தகத்தின் 4 வகைகளை விபரிப்பதற்கு வரிப்படம் ஒன்றை வரையுமாறும் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு உதாரணங்களை எழுதுமாறும் கேட்கப்பட்ட பகுதி (a) இற்கு பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி நிலையில் இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் 4 வகைகளையும் சரியாக இனங்கண்டிருந்தனர் ஆயினும் சிலர் ஒரு வரிப்படத்தின் மூலம் அதனை விவரிக்கவில்லை. கணிசமானளவு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வகைக்கும் உதாரணங்களை எழுதுவதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெறுவதன் பொருட்டு வியாபார செயற்பாடுகள் முகாமைத்துவத்தின் நடைமுறை அம்சங்கள் தொடர்பாகப் பு'ரணமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(b) அதிகளவான பரீட்சார்த்திகள் இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரதிகூலங்களைச் சரியாக விளக்கி முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது அன்றாடச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

## பகுதி D

**வினா இல.10** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இது "KIK குழுமம்" பற்றிய விவரண (scenario) அடிப்படையிலான வினாவாக இருந்ததுடன் அது சந்தைப்படுத்தலின் வகிபாகம் தொடர்பான அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்த்தது.

(a) இந்த உப வினா, தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புடைய சந்தைக் கலவை (7P's மாதிரி) இன் வேறுபட்ட மூலகங்களை விவரிக்குமாறு கோரியிருந்தது. உண்மையான வாழ்க்கை விவரணத்தினுள் (scenarios) சந்தைப்படுத்தலின் முக்கிய எண்ணக்கருக்கள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாட்டு அறிவினை பிரயோகிப்பதில் பரீட்சார்த்திகள் கஷ்டங்களை எதிர்கொண்டமை அவதானிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நடைமுறையின் அடிப்படையில் தரப்பட்ட விவரணத்துடன் தொடுக்கப்பட வேண்டிய விடயங்களைப் புறக்கணித்து, அவர்களுடைய விடைகளில் கோட்பாட்டுச் சூழலை மீளுருவாக்கம் செய்திருந்தனர்.

(b) பல பரீட்சார்த்திகள், வினாவின் இந்தப் பகுதி மூலம் தேவைப்படுத்தப்பட்டதான உள்நாட்டுச் சந்தையில் "Juzzy" இனை நிலைப்படுத்துவதற்கு "KIK" குழுமத்திற்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற நிலைப்படுத்தல் உபாயங்களை சரியாக எடுத்துக் காட்டியிருந்தனர். எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள், அடையாளங் காணப்பட்ட நிலைப்படுத்தல் உபாயங்களை உதாரணங்களுடன் விளக்குவதற்குத் தவறியிருந்தமை ஒரு பொதுவான பலவீனமாகக் காணப்பட்டது. இது பரீட்சார்த்திகள் கோட்பாட்டு அறிவினைப் பிரயோகிப்பது தொடர்பில் தமது ஆற்றலை விருத்தி செய்ய வேண்டும் என்பதற்கு ஆதாரமாக உள்ளது. அவர்கள், இந்த வகையான விவரண அடிப்படையில் அமைந்த வினாக்களுக்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தின் நடைமுறை அம்சங்கள் மீது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணமின்றி, நிலைப்படுத்தல் உபாயங்களை தேவையற்ற முறையில் (அனாவசியமாக) விவரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, இதன் விளைவாக பரீட்சார்த்திகள் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

(c) பலர், ஐந்து சந்தைப்படுத்தல் தத்துவங்களை விவரிப்பதில் வெற்றி கண்டிருந்தனர். ஆனால், கணிசமானளவு பரீட்சார்த்திகள் "KIK's Juzzy க்கு தொடர்புடைய தத்துவத்தினை அங்கீகரிப்பதற்குத் (அடையாளப்படுத்துவதற்குத்) தவறியுள்ளனர். சூழமைவில் இருந்து அறிவையும் விடயங்களையும் பயன்படுத்தி "KIK's" Juzzy யுடன் தொடர்புபட்ட தத்துவத்தினை நியாயப்படுத்துவதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள், இந்த வகை வினாக்களுக்கு சரியான கோட்பாட்டு ரீதியான அடித்தளத்துடன் தமது விடைகளை நியாயப்படுத்துவதில் மேம்பாடு அடைய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

\- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் தன்மையின் மட்டத்தினை விருத்தி செய்வதில் கருத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தை கையில் எடுத்ததும் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். கட்டாய வினாக்களை அடையாளங் காணவும். தாமாகவே வினாப்பத்திரத்தில் விடைகளை எழுத வேண்டாம்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்கள் மற்றும் விபரங்களை எழுத வேண்டாம். வினாவானது நேரடியான துல்லியமான விடையினையே எதிர்பார்க்கிறது.

3. நீங்கள் விடையினை எழுதும்போது நேர முகாமைத்துவம் மிகவும் முக்கியமானதாகும்.

4. விடைப்பத்திரத்தை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை பரீட்சிக்கவும்.

5. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.

6. அறிவினை நிகழ்நிலைப்படுத்துவதற்காக அண்மையில் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.

7. வரைவிலக்கணங்களுடன்கூடிய வினைச்சொல் நிரல் வினைாப்பத்திரத்துடன் இணைக்கப் பட்டிருப்பதுடன் நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச் சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

8. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -